பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 05 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மேற்கொண்டதற்காக இஸ்லாமிய மதகுருமார்கள் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்கை நேரில் சந்தித்து நன்றியும், ஆதரவும் தெரிவித்துள்ளனர்.

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குச் செல்கிறார்.

- இளையோருக்கு நீதி, பாதுகாப்பு மற்றும் மரியாதை அளிப்பதுதான் வலிமையான சமுதாயத்திற்கு அடித்தளமாக அமையும் என்று மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

- காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 103 பேர் உயிரிழந்தனர்.

- Tehran சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் பட்டம் வென்றார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மேற்கொண்டதற்காக இஸ்லாமிய மதகுருமார்கள் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்கை நேரில் சந்தித்து நன்றியும், ஆதரவும் தெரிவித்துள்ளனர்.

அஜ்மீர் தர்காவின் தலைமை குரு சையத் நஸ்ருதீன் சிஸ்டி உள்ளிட்டோர் அடங்கிய இக்குழுவினர், பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு. Shehzad Poonawalla உடன் திரு. ராஜ்நாத் சிங்கை புதுதில்லியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

பின்னர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், அணு ஆயுதங்களைக் காட்டி தீவிரவாத தாக்குதல் நடத்தும் பாகிஸ்தானின் போக்கு இனியும் செல்லுபடியாகாது என்று தெரிவித்துள்ளனர்.

அப்பாவி இந்தியர்கள் மீது தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகள் எங்கிருந்தாலும் அவர்கள் அழிக்கப்படுவார்கள் என்பதற்கு சிறந்த உதாரணமாக ஆபரேஷன் சிந்தூர் அமைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் ஆகியோரையும் சந்தித்துப் பேசினர்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குச் செல்கிறார்.

இரண்டு நாள் பயணமாக கேரளா செல்லும் அவர், சபரிமலை அடிவாரத்தில் உள்ள நிலக்கல் பகுதிக்கு ஹெலிகாப்டரில் சென்று பின்னர் அங்கிருந்து பம்பை வழியாக சபரிமலைக்கு செல்ல உள்ளார்.

இதன் மூலம் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குச் செல்லும் முதல் குடியரசுத்தலைவர் என்ற சிறப்பை திருமதி திரௌபதி முர்மு பெறுகிறார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஐரோப்பிய நாடுகளில் 6 நாள் பயணமாக இன்று நெதர்லாந்து புறப்பட்டுச் செல்கிறார்.

அதனைத் தொடர்ந்து வரும் 24ஆம் தேதி வரை டென்மார்க், ஜெர்மனி நாடுகளுக்கும் அவர் செல்ல உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமது இந்தப் பயணத்தின்போது அமைச்சர் திரு. ஜெய்சங்கர், ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் இருதரப்பு ஒத்துழைப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்த இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுடனான நீடித்த ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீட்டை மேம்படுத்தும் வகையில் இந்தப் பயணம் அமையும் என வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

இளையோருக்கு நீதி, பாதுகாப்பு மற்றும் மரியாதை அளிப்பதுதான் வலிமையான சமுதாயத்திற்கு அடித்தளமாக அமையும் என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் சிறார் நீதிச் சட்டம் குறித்த தேசிய ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

ஜார்கண்ட் உயர்நீதிமன்ற நீதிபதி Anubha Rawat Chaudhary உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில், சிறார் நீதிச் சட்டத்தை மேலும் திறம்பட செயல்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன், பெங்களூரு தூர்தர்ஷன் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நேற்று நடைபெற்ற இந்த ஆய்வின்போது அந்த நிலையத்தில் இருந்து ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் குறித்து அதிகாரிகளுடனும் அவர் ஆலோசனை நடத்தினார்.

முன்னதாக பெங்களூரு தூர்தர்ஷன் வளாகத்தில், அன்னையின் பெயரில் மரம் வளர்க்கும் திட்டத்தின்கீழ் மரக்கன்று ஒன்றையும் திரு. எல். முருகன் நட்டு வைத்தார்.

<<<<>>>>

இனி…

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியை கொண்டாடும் வகையில் சாதனை படைத்த பாதுகாப்புப்படையினரின் சிறப்பை போற்றும் வகையிலான செய்தித்தொகுப்பு…

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா யோகேந்திர சிங் யாதவின் வீர தீர சாதனைகள்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைக் கொண்டாடும் விதமாக நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் மூவர்ணக் கொடி பேரணி நடைபெற்றது.

ஹரியானா மாநிலம் அம்பாலா கண்டோன்மெண்ட், ரிவாரி, Hodal உள்ளிட்ட இடங்களில் இந்தப் பேரணி நடைபெற்றது.

அம்பாலாவில் நடைபெற்ற பேரணிக்கு தலைமை வகித்த அம்மாநில அமைச்சர் திரு. அனில் விஜ், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு தீவிரவாதத்திற்கு கடுமையான பதிலடி கொடுத்துள்ளதாக தெரிவித்தார்.

ஜார்கண்ட் மாநிலம் ஜம்ஷெட்பூரில் நடைபெற்ற பேரணியில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று ராணுவத்தினருக்கு ஆதரவு தெரிவித்தனர்.

தலைநகர் தில்லியில் ஆர்.கே. புரம் பகுதியில் நடைபெற்ற பேரணியில் பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பன்சூரி ஸ்வராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஜம்மு-கஷ்மீரில் பூஞ்ச், ரியாசி உள்ளிட்ட இடங்களில் பேரணி நடைபெற்றது.

<<<<>>>>

தேசிய மாணவர் படையான என்.சி.சி. மாணவர்கள், எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளனர்.

5 மாணவர்கள் மற்றும் 5 மாணவிகள் அடங்கிய இந்தக் குழுவினரை கடந்த மாதம் 3ஆம் தேதி பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், புதுதில்லியில் இருந்து அனுப்பி வைத்தார்.

பல்வேறுகட்ட தகுதிச் சோதனைகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த மாணவர்களுக்கு சியாச்சின் மலையடிவாரத்தில் உள்ள ராணுவ மலையேற்ற பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு தற்போது எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியுள்ளனர்.

<<<<>>>>

காஸா பகுதியில் இஸ்ரேல் கடந்த 2 நாட்களில் நடத்திய விமான தாக்குதலில் 103 பேர் உயிரிழந்தனர்.

தற்காலிக போர்நிறுத்தம் தொடர்பாக ஹமாஸ் அமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள நிலையில், இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

கான் யூனிஸ் நகரில் மட்டும் 48 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஜபாலியா உள்ளிட்ட இடங்களிலும் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையின்படி பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கு முன்பாக இஸ்ரேல் படைகள் முழுமையாக விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என்று ஹமாஸ் வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

அரசியல் சாசனத்தில் அண்ணல் அம்பேத்கர் தெரிவித்துள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமையை நிலைநாட்டி வலுப்படுத்த பாடுபட உள்ளதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கவாய் தெரிவித்துள்ளார்.

மும்பையில் உள்ள சைதன்ய பூமிக்குச் சென்ற தலைமை நீதிபதி, அங்குள்ள அம்பேத்கர் நினைவிடத்தில் மரியாதை செலுத்தியபின் இதனைத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

Tehran சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் பட்டம் வென்றார்.

ஈரானில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர், 7-6, 6-2 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் Aleksandr Labanov–ஐ வென்றார்.

-----------

பிரான்சில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Hariharan – Ruban இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்த இணை, 21-12, 21-11 என்ற செட் கணக்கில் பிரான்சின் Mael Cattoen – Lucas Renoir இணையை வென்றது.

-------------

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து கோப்பையை இந்திய அணி வென்றது.

அருணாச்சலப்பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா பெனால்டி சூட் அவுட் முறையில் 4-3 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

<<<<The End>>>>